# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## S.C.No. 37/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.த.சா | : | 7 | நாள் | : | 22.08.2024 |
| பெயர் | : | வேலுச்சாமி | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 22nd day of August 2024.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நீதிமன்றத்திற்கு அ.த.சா.1 பரமசிவமும் வந்துள்ளார் என்றால் சரிதான். என்னை அவர்தான் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு எதிர் வீட்டில் என் தம்பி பரமசிவம் வீடு உள்ளது. எனது வீட்டிற்கு மேற்கில் கலைச்செல்வி வீடு உள்ளது. கலைச்செல்வி வீட்டிற்கு அடுத்து மேற்கில் என் அண்ணன் சங்கரபாண்டியன் வீடு உள்ளது என்று நான் போலீசார் விசாரணையில் கூறவில்லை. கடந்த 09.09.2019 அன்று மதியம் 12.40 மணிக்கு நான் என் வீட்டில் இருந்தேன் என்று போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன். நான் போலீசார் விசாரணையில் மதியம் 12.40 மணிக்கு இருந்தேன் என்று போலீசார் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலீசார் விசாரணையில் என் வீட்டிற்கு முன்பாக குழந்தை கவீனா நின்று கொண்டிருந்தார் என்று போலீசார் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. மதியம் 1.30 மணிக்கு முனீஸ்வரியும், பழனிச்சாமியும் குழந்தையை வீட்டிலிருந்து வெளியே தூக்கி கொண்டு வந்தார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால்

சரியல்ல. கவீனாவின் கீழ் உதட்டில் இரத்தக்காயம் இருந்தது என்று போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தபோது 3 நாட்கள் கழித்து தென்மலை விஏஓ அம்மாவின் மூலம் ரிப்போர்ட் கொடுத்தோம் என்றும், 12.09.2019 ம் தேதியன்று கேஸ் கொடுத்தோம் என்றும், போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.2 சக்திமாரி அவரது மகள் இறப்பு சம்பந்தமாக விசாரித்தபோது நான் சக்திமாரியிடம் முனீஸ்வரி தான் அவரது மகள் கவீனாவை இறப்பதற்கு முன்பாக கையை பிடித்து அழைத்துச்சென்றாார் என்று நானும் என் மகள் அனிதாவும் பார்த்ததாக சக்திமாரியிடம் கூறினேன். என் வீட்டிற்கு பின்புறம் கணேசன், மாரியப்பன் வீடு உள்ளது. அதற்கு மேற்கே என் வீடு உள்ளது. மாரியப்பன் வீட்டிற்கு எதிரே பரமசிவம் வீடு உள்ளது. என் வீட்டிற்கு மேற்கே கருப்பையா வீடு உள்ளது. அதற்கும் மேற்கே குருசாமி வீடு பெட்டிக்கடையுடன் உள்ளது. அதற்கும் மேற்கே மகேஸ்வரி வீடு உள்ளது. அதற்கு எதிரே என் அண்ணன் சங்கரபாண்டியன் வீடு உள்ளது. அதற்கும் கீழ்புறம் சங்கர், பேச்சியம்மாள் வீடு உள்ளது. அங்கே தெருக்குழாய் உள்ளது. எங்கள் வீடு அந்த தெருவிலிருந்து 3 படிகள் ஏறி செல்லும் உயரத்தில் உள்ளது. என் வீட்டிற்கு முன்பாக கோவில் திண்ணை உள்ளது. அது சிமெண்ட் தரையாகும். வெயில் நேரத்தில் அங்கு யாரும் அமரமுடியாது என்றால் சரியல்ல. என் அண்ணன் வீட்டை சுற்றி 10 அடி உயரத்தில் தென்னை மட்டை வைத்து அடைக்கப்பட்டிருந்தது என்றால் ஒரு ஆள் உயரத்துக்கு அடைக்கப்பட்டிருந்தது. எங்கள் தெருவில் இருந்து அவர் வீட்டைப் பார்த்தால் உள்ளே நடக்கும் விவரங்கள் தெரியாது. சம்பவ தினத்தன்று அந்த வீடு இடிக்கப்பட்டு வேலை நடைபெற்றது என்றால் சரியல்ல. அது இடிக்கப்பட்டிருந்தது. புதிதாக வீடு கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கவரிங் நகைக்கடைக்காரரை அன்று பார்த்தேன். கவரிங் நகைக்கடைக்காரர் எந்த ஊரைச்சேர்ந்தவர் என்பதை நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. குருசாமி கடை அருகில் தான் நான் அவரை பார்த்தேன்.

அவருடன் யார் யார் பேசிக்கொண்டிருந்தார்கள் என்பது எனக்கு தெரியாது. அவர் கால்மணி நேரம் கழித்து சென்றுவிட்டார். அவர் எத்தனை மணிக்கு சென்றார் என்பது குறித்து எனக்கு தெரியாது. என் மகள் வீட்டிற்குள் தான் இருப்பார் என்றால் சரிதான். அவர் குழந்தை பிறப்பிற்காக வந்திருந்தார். வீட்டிற்குள் மட்டும் தான் இருப்பார் என்றால் சரியல்ல. அனிதாவிற்கு நாங்கள் சொன்ன பிறகுதான் குழந்தைக்கு என்ன ஆனது என்பது தெரியும். சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு இரவு சென்றேன். சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு போலீசார் வந்திருந்தனர். போலீசார் அங்கு வைத்து எங்களை விசாரிக்கவில்லை. போலீசார் வேறு யாரிடம் விசாரித்தார்கள் என்பது எனக்கு தெரியாது. பரமசிவத்தை விசாரித்தார்களா என்பது எனக்கு தெரியாது. என் சகோதரர் பரமசிவத்துடனே இருந்தேன். குழந்தைக்கு எவ்வாறு இந்த நிலை ஏற்பட்டது என்று நாங்கள் பேசிக்கொண்டோம் என்றால் சரியல்ல. அதன்பின்னர் 3 நாட்கள் கழித்துதான் 12ம்தேதி சிவகிரி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். நாங்கள் புகார் கொடுக்க செல்லும் முன்பாக எதிரியையும், அவரது கணவரையும் போலீசார் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விட்டார்கள். கிராம நிர்வாக அலுவலர் புகார் கொடுத்த பின்பு தான் நாங்கள் காவல் நிலையத்திற்கு சென்றோம். கிராம நிர்வாக அலுவலர் காவல் நிலையம் சென்ற அரைமணி நேரம் கழித்து தான் நாங்கள் சென்றோம். நாங்கள் காலை 10.00 மணிக்கு காவல் நிலையம் சென்றோம். என்னுடன் கூடப் பிறந்தவர்கள் 10 பேர். அருணாசலம் எனது தங்கை. ராமலட்சுமி, முனீஸ்வரி என்ற 2 மகள்கள் உண்டு. அவர்களில் யாரையாவது ஒருவரை எதிரியின் கணவர் பழனிச்சாமிக்கு திருமணம் செய்து வைக்கவேண்டும் என்று முடிவு செய்தோம் என்றால் சரியல்ல. பழனிச்சாமி அவர்களை திருமணம் செய்ய மறுத்து எதிரியை திருமணம் செய்து கொண்டதால் எதிரி மீது எங்களுக்கு விரோதம் உண்டு என்றால் சரியல்ல. பொது வீட்டை பிரிப்பதில் எதிரி குடும்பத்தாருக்கும் எங்களுக்கும் பிரச்சினை இருந்தது என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் உள்ள காடு பிரிப்பது சம்பந்தமாக ஒரு பிரச்சினை இருந்து

வருகிறது என்றால் சரியல்ல. எதிரி குடும்பத்துக்கும், எங்கள் குடும்பத்துக்கும் விரோதம் இருந்தது என்றும், அதனால் தான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. குழந்தையின் உடைகளில் இரத்தம் படிந்திருந்ததா என்றால் இல்லை. என் தம்பி, அவர் மனைவி அனைவருக்கும் குழந்தையை மருத்துவமனைக்கு அழைத்து சென்ற விவரம் தெரியும். நான் சாட்சியத்தில் கூறியிருப்பது போல் கவீனாவை முனீஸ்வரி அழைத்து சென்றார் என்றும், அதை நான் பார்த்தேன் என்றும், பழனிச்சாமி மற்றும் முனீஸ்வரி மதியம் 1.30 மணிக்கு தூக்கிக்கொண்டு வெளியே வந்தார்கள் என்றும், கபீனாவுக்கு பேச்சு மூச்சு இல்லை என்றும், நாங்கள் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் கவீனா வீட்டு வேலைக்காக என் தம்பி பரமசிவம் வீட்டிற்குள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சாமான்களை இழுத்து விளையாடினார் என்றும், அவை குழந்தை மீது விழுந்து விட்டது என்றும், குழந்தை எழும்ப முடியாமல் இருந்த குழந்தையை என் தம்பி பரமசிவம் அவர் வீட்டிலிருந்து எடுத்து வந்து மருத்துவமனைக்கு கொண்டு சென்றார் என்றால் சரியல்ல. என் தம்பி மகள் கவீனா அவர் வீட்டை விட்டு வெயில் நேரத்தில் வெளியே வரவேண்டிய அவசியமே இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த எதிரியை இந்த குடும்பத்தில் இருந்து விரட்டி அவரது கணவர் பழனிச்சாமியிடம் இருந்து துரட்டி விடவேண்டும் என்று அவர் மீது பொய்யாக புகார் கொடுத்து அதற்கு அனுசரனையாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் என் தம்பி பரமசிவமும் அவரது குழந்தையை கவனமாக பராமரித்திருந்தால் குழந்தைக்கு இறப்பு ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. பரமசிவத்திற்கும், சக்திமாரிக்கும் பிரச்சினை எதுவும் வந்து விடக்கூடாது என்பதற்காக நான் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம்

**அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கவீனா இறப்பிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.**